### முதல்வர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் சேர்க்கையில் புதிய சாதனை!


## ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வி ஆய்வு அறிக்கை!


**சென்னை, மார்ச். 24-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில், மேல்நிலைப் பள்ளி மாணவ - மாணவியர் சேர்க்கையில், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களை பின்னுக்குத் தள்ளி புதிய சாதனை படைத்துள்ளது.**

**இது ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வி ஆய்வு அறிக்கை வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**அ.தி.மு.க. ஆட்சியில் மாணவிகள் சேர்க்கை 49.8 சதவீதம் மாணவர்கள் சேர்க்கை 46.6 சதவீதம் மட்டுமே !**




**பா.ஜ.க ஆட்சி செய்யும் குஜராத் மாநிலத்தில் மாணவிகள் 24.7சதவீதம் - மாணவர்கள் 24 சதவீதம் மராட்டிய மாநிலத்தில் மாணவிகள் 47.1 சதவீதம் - மாணவர்கள் 46.7 சதவீதம் உத்திரப் பிரதேசத்தில் மாணவிகள் 31.7 சதவீதம் - மாணவர்கள் 31.1 சதவீதம் இராஜஸ்தானில் மாணவிகள் 33.6 சதவீதம் - மாணவர்கள் 34.2 சதவீதம் மத்தியப் பிரதேசத்தில் மாணவிகள் 24.9 சதவீதம் - மாணவர்கள் 24.7 சதவீதம் என்று ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த மாவட்ட கல்வி ஆய்வு அறிக்கை (UDISE) யில் கூறப்பட்டுள்ளது.**

**இதுகுறித்து ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-**

திராவிட முன்னேற்றக் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முன்னேற்றம் ஒன்றே என் வாழ்வின் ஒரே குறிக்கோள் என்று கூறி அந்த குறிக்கோளை அடைந்திட ஓய்வின்றி உழைத்து வருகிறார்.

கல்விச் செலவுகளும், மருத்துவச் செலவுகளும் ஒவ்வொரு குடும்பத்தில் முன்னேற்றத்திலும், தடைக்கற்களை எழுப்புகின்றன. அதிலும் ஏழைக் குடும்பங்களில் இது மிகவும் அதிகமாகும்.

சமத்துவமும் சமதர்மமும் செழித்தால்தான் தமிழ்நாடு தழைக்கும். பொருளாதாரச் சமத்துவம் சிறக்கும் எனும் அடிப்படையில் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் ஏழை எளியோருக்கு உதவும் திட்டங்களுக்கே முன்னுரிமை தந்தார்.

**தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது!**

விடியல் பயணத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் முதலிய திட்டங்களை திராவிட மாடல் ஆட்சி செயல்படுத்தியது. இதனால் மேல்நிலைப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சேரும் மாணவ மாணவியர் எண்ணிக்கை அ.தி.மு.க. ஆட்சியை விட அதிகரித்து தமிழ்நாடு சாதனைகள் படைத்துள்ளது.

2020-2021 அ.தி.மு.க. ஆட்சியில் மேல்நிலைக்கல்வி மாணவியர்கள் சேர்க்கை 49.8 சதவீதம் இன்று திராவிட மாடல் ஆட்சியில் 2024-2025 ஆம் ஆண்டு கணக்கின்படி அது 76 சதவீதம் ஆக உயர்ந்துள்ளது.

அதே போல 2020-2021 அ.தி.மு.க. ஆட்சியில் மேல்நிலைக் கல்வி மாணவர்கள் சேர்க்கை 46.6 சதவீதம் இன்று திராவிட மாடல் ஆட்சியில் 2024-2025 ஆம் ஆண்டு கணக்கின்படி அது 71 சதவீதம் ஆக உயர்ந்துள்ளது.

**பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் அவல நிலை!**

குஜராத் மாநிலத்தில் மாணவிகள் 24.7சதவீதம் - மாணவர்கள் 24 சதவீதம் , மராட்டிய மாநிலத்தில் மாணவிகள் 47.1 சதவீதம் - மாணவர்கள் 46.7 சதவீதம், உத்திரப்பிரதேசத்தில் மாணவிகள் 31.7 சதவீதம் - மாணவர்கள் 31.1 சதவீதம், இராஜஸ்தானில் மாணவிகள் 33.6 சதவீதம் - மாணவர்கள் 34.2 சதவீதம், மத்தியப் பிரதேசத்தில் மாணவிகள் 24.9 சதவீதம் - மாணவர்கள் 24.7 சதவீதம் இப்படி பா.ஜ.க ஆளும் எல்லா மாநிலங்களும் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனையை நெருங்கக்கூட முடியவில்லை.

‘திராவிட மாடல்’ ஆட்சியால் விளைந்த இந்த சாதனைக்கு ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த மாவட்ட கல்வி ஆய்வு அறிக்கை (UDISE) சான்று கூறியுள்ளது. தமிழ்நாடு பெற்றுள்ள இந்த சாதனையை தொட்டுக் கூடப் பார்க்க முடியாத அளவில் இந்தியாவில் பா.ஜ.க ஆளும் இதர மாநிலங்கள் உள்ளன என்பது தெளிவாகிறது.

இந்தச் சாதனை எப்படி நிகழ்ந்தது? ‘திராவிட மாடல்’ அரசு 2021-இல் ஆட்சிப் பொறுப்பேற்றப்பின் செயல்படுத்திய விடியல் பயணத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் முதலிய புதுமையான திட்டங்களால் தான் இந்தப்புரட்சி மலர் பூத்துள்ளது! என்பதே உண்மையாகும்.

### செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி

# திறன் மேம்பாடு பயிற்சிகளை ஊக்குவிக்க ஒன்றிய அரசிடம் திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

*புதுடெல்லி,மார்ச். 24-*

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர், எஸ். ஆர். சிவலிங்கம் 18 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன் படுத்துவதன் மூலம், திறன் மேம்பாடு பயிற்சிகளை தொழிலாளர்களுக்கு அளிக்கும் வகையில் ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டு துறையில் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா? என்றும் அதனால் மற்ற துறைகளிலும் பயன்பாடு கிடைத்துள்ளதா? என்றும் தொழில் முனைவோர் உரிய பயன்பாட்டை அடைந்துள்ளனரா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் மாண்புமிகு திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் அளித்த பதில் வருமாறு:-

திறன் மேம்பாட்டுத் துறையின் வழிகாட்டுதலின்படி 36 தயாரிப்பு துறைகளில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதால் தொழிலாளர்களின் மேம்பாடு உறுதி செய்யப்படுகிறது என்றும், பிரதம மந்திரி கௌசல் விகாஸ் திட்டம், ஜன சிக்சான் திட்டம், தேசிய பழகுநர் மேம்பாட்டு திட்டம், கைவினைஞர்கள் பயிற்சி திட்டம் ஆகியன தொழிற்பயிற்சி நிலையங்கள் இணைந்து நடத்தப்படுவதால் திறன்மிக்க தொழிலாளர்கள் தொடர்ந்து அனைத்து தயாரிப்பு தொழிற்சாலைகளுக்கும் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது என்றும், 2,595 கல்வித் தகுதிகள் இதுவரை அங்கீகரிக்கப்பட்டு உள்ளது என்றும், இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், தொழிலாளர் துறையின் தலைமை பயிற்சி இயக்குநர் செயற்கை நுண்ணறிவு, 5ஜி தொழில் நுட்பம், ஆளில்லா விமானங்கள், சைபர் பாதுகாப்பு போன்ற புதிய துறைகளும் பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிட்டுள்ளார் என்றும், 36 தயாரிப்பு துறை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளனர் என்றும், பிரதம மந்திரி கௌசல் விகாஸ் திட்டத்தின்படி 45 சதவீத தொழிலாளர்களுக்கு திறன் மேம்பாட்டு அடைந்துள்ளது என்றும், 50 சதவீத தொழிலாளர்களுக்கு வருமானத்தில் உயர்வு அதிகரித்துள்ளது என்றும், ஜன் சிக்சான் திட்டத்தின் கீழ் 32 இலட்சம் தொழிலாளர்கள் பயனடைந்து உள்ளனர்.

இவ்வாறு தேசிய பழகுநர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 35 இலட்சம் தொழில் பழகுநர்கள் பயன் அடைந்துள்ளனர் என்றும் ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.

# முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எச்சரிக்கை!

முதல் பக்கத் தொடர்ச்சி

ஒன்றியத்தில் ஆட்சி செய்யும் கட்சியை மாநிலத்திலும் தேர்வு செய்யாவிட்டால் மாநிலத்திற்கான நிதி கிடைப்பதில் சிரமம் ஏற்படும் என என மக்களை மறைமுகமாக மிரட்டும் வகையில் உள்ளதாகவும் அவர் விமர்சித்துள்ளார். மாநில அரசுகள், ஒன்றிய ஆளும் கட்சியின் நன்மதிப்பையோ, தயவையோ நம்பி இருக்கும் நிலை இந்திய அரசியலமைப்பில் இல்லை என்றும் மாறாக, ஒன்றியமும் மாநிலங்களும் தங்களின் அதிகார வரம்புகளுக்குள் இணைந்து செயல்படும் ஒரு கூட்டாட்சி அமைப்பையே அரசியல் அமைப்பு உருவாக்கி உள்ளதாக அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

டெல்லியில் ஆட்சி செய்யும் கட்சியால் ஆளப்படும் மாநிலங்களை மட்டுமின்றி ஒட்டுமொத்தக் குடியரசை யுமே ஒன்றிய அரசு பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். தேசிய வரிவிதிப்பின் மூலம் திரட்டப்படும் நிதி ஒன்றிய ஆளும் கட்சிக்கானதல்ல, அது இந்திய ஒன்றிய அரசுக்கே சொந்தமானது, மக்கள் எப்படி வாக்களித்திருந்தாலும், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், குடியரசின் பெயராலேயே அவர்களிடம் வரிகள் வசூலிக்கப்படுகின்றன என்று சுட்டிக்காட்டி உள்ள எஸ்.ஓய். குரேஷி, மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வு ஒரு மாநிலத்தை எந்தக் கட்சி ஆட்சி செய்கிறது என்பதன் அடிப்படையில் இருக்கக் கூடாது என்று வலியுறுத்தி உள்ளார்.

**நிதி ஆணையம் பரிசீலிக்க வேண்டும்!**

மக்கள் தொகை அடிப்படையிலான நிதிப் பகிர்வு, மக்கள்தொகையை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்திய தென் மாநிலங்களுக்கு பாதகமாக அமையக்கூடும் என்பதால், இதுகுறித்து நிதி ஆணையம் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். வளர்ச்சி என்பது அரசியல் சார்புடையதாக இருக்கக் கூடாது, மாறாக, அனைத்து மாநிலங்களையும் ஒவ்வொரு குடிமகனையும் சமமான நியாயத்துடன் நடத்தும் விதிகளின் அடிப்படையிலேயே அது அமைந்திருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ள முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ்.ஓய். குரேஷி ஒரே ரயிலை எத்தனை என்ஜின்கள் இழுத்துச் செல்கின்றன என்பதை விட இந்தியாவின் கூட்டாட்சி ஜனநாயகத்தை காப்பாற்றும் ஒற்றை என்ஜின்தான் மிக முக்கியம் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் – இன்று

# இராமநாதபுரம் மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் அறிக்கை!

*இராமநாதபுரம், மார்ச் 24 -*

இராமநாதபுரம் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று ( 24.03.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணியளவில் சிவகங்கை மாவட்டம், கீழக் கண்டனி ராஹா திருமண மஹாலில் கழக இளைஞரணி செயலாளர் , துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.



எனவே இக்கூட்டத்தில் அனைத்து ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுவதை ஒன்றிய, நகர, பேரூர் கழகச்செயலாளர்கள் உறுதி செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.





மதுரை வடக்கு மாவட்டம் சோழவந்தான் தொகுதி சார்பாக அலங்காநல்லூரில் நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது பிரச்சார பயணத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓ.பி.ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன், மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன், அவைத்தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், தொகுதி பொறுப்பாளர் சுப.த.சம்பத், கழக நிர்வாகிகள் கரு.தியாகராஜன், சேகர், தன்ராஜ், முத்தையன், அருண்குமார், பரந்தாமன், பாலராஜேந்திரன், பசும்பொன்மாறன், பொதும்பு தனசேகர், ரகுபதி, பால்பாண்டியன், மனோகரவேல் பாண்டியன், சத்தியபிரகாஷ், ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், ஜெயராமன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழகத்தினர் என ஏராளமானோர் பங்கேற்றனர்.



தூத்துக்குடி மாவட்டம், புதூர் ஊராட்சி ஒன்றியம்,கருப்பூர் கிராமத்தில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயநல கூடம் கட்டுவதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் புதூர் ஒன்றிய செயலாளர்கள் மும்மூர்த்தி, ராதாகிருஷ்ணன், செல்வராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.